DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 276/2024 |
| Deposition of Witness for | : | P.W. 5 |
| Name | : | **அய்யம்பாண்டி** |
| Father's Name | : | **முத்தையா** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர் )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.08.2025

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது செல்லப்பனேந்தலில் வசித்து வருகிறேன். நான் மரவேலை செய்து வருகிறேன். சாட்சிகள் அ.சா.1 முதல் 3 வரையிலானவர்களை எனக்குதெரியும் . ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சாட்சி ராஜசேகர் என்பவரை எனக்கு தெரியும். சுமார் 4, 5 மாதங்களுக்கு முன்பு எனது தங்கை ரேவதி என்பவரின் உறவினருடைய இருசக்கர வாகனம் காணாமல் போய்விட்டதாக கூறி என்னிடம் போலிசார் கையொப்பம் வாங்கினார். வண்டி காணாமல்போனது சம்பந்தமாக எனது தண்ணீர் தொட்டி அருகேவைத்து திருப்புவனம் போலிசார் எனது கையொப்பங்களை பெற்றுக்கொண்டார். பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான்.

2. **பார்வைமகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ. 2** ஆகும். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.** 3 ஆகும். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

**3.** போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 23.06.2024 ம் தேதி மாலை 06.30 மணியளவில் திருப்புவனம் காவல் நிலைய ஆய்வாளர் வழக்கின் சம்பவஇடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் அன்றைய தினமே மாலை 07.30 மணியளவில் சம்பவ இடத்தில் வைத்து ரத்தம்பட்ட மற்றும் ரத்தம் படாத மண் சிறிதளவையும் அருவாள் ஒன்றையும் சம்பவ இடத்தில்வைத்து கைப்பற்றினார்கள் என்றும் அதற்காக நான் சாட்சி கையொப்பம் போட்டதாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் எழுதப்படாத வெள்ளை தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக்காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.08.19 17:14:54 +0000

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை..**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 276/2024 |
| Deposition of Witness for | : | P.W. 6 |
| Name | : | **ராஜசேகர்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர் .)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.08.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது செல்லப்பனேந்தலில் வசித்து வருகிறேன். நான் டாஸ்மாக் அரசு மதுபானக்கடையில் லோடு மேனாக வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 முதல் 3 வரையிலானவர்கள் மற்றும் வழக்கின் எதிரியை எனக்கு தெரியும். தற்போது காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் உள்ள ராஜசேகர் என்ற முதல் கையொப்பம் என்னுடையது அல்ல. நான் ஆங்கிலத்தில் கையொப்பம் போடும் பழக்கம் இல்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது . போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

2. போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 23.06.2024 ம் தேதி மாலை 06.30 மணியளவில் திருப்புவனம் காவல் நிலைய ஆய்வாளர் வழக்கின் சம்பவஇடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் அன்றைய தினமே மாலை 07.30 மணியளவில் சம்பவ இடத்தில் வைத்து ரத்தம்பட்ட மற்றும் ரத்தம் படாத மண் சிறிதளவையும் அருவாள் ஒன்றையும் சம்பவ இடத்தில்வைத்து கைப்பற்றினார்கள் என்றும் அதற்காக நான் சாட்சி கையொப்பம் போட்டதாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் வேண்டுமென்றே மறுத்து எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக்காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.08.19 17:15:04 +0000

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 276/2024 |
| Deposition of Witness for | : | P.W. 7 |
| Name | : | **கோபுரம்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர் )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது செல்லப்பனேந்தலில் வசித்து வருகிறேன். நான் சிலைமான் காசிம் டெக்ஸ்டைல்சில் சூப்பர்வைசராக வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரி கண்ணன் என்பவரை எனக்கு தெரியும் . சாட்சி அருள் மணி என்பவரை எனக்கு தெரியும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

2. போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 24.06.2024 ம்தேதி திருப்புவனம் காவல்நிலைய ஆய்வாளர் இவ்வழக்கின் எதிரியான கண்ணன் என்பவரை திருப்புவனம் காவல்நிலையத்தில் வைத்து என்முன்னிலையில் விசாரித்தார் என்றும் விசாரணையின் போது எதிரி தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் போலிசார் அதை பதிவு செய்துகொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார் என்றும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது வேண்டுமென்றே எனது கையொப்பத்தை மறுத்து எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக்காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

**உதவி அமர்வு நீதிபதி,**
**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**சிவகங்கை.**